**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.27/2015**

**DW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | டாக்டர் ரகுகுமார் |
| **Father's Name** | : | ஜானகிராமன் |
| **Village** | : | பொன்னம்பூண்டி |
| **Taluk/District** | : | வானூர்/ விழுப்புரம் |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.10.2025.
A1, 3 present. A2 absent. Petition u/s 317 crpc filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேட்டவலம் ஆரம்ப சுகாதார மையத்தில் வட்டார மருத்துவ அலுவலராக பணிபுரிகிறேன். கடந்த 2013 வருடத்தில் சார்லஸ் என்பவர் சிகிச்சைக்காக எங்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்றுள்ளார். மேற்படி சார்லஸ் தாக்கப்பட்டதாக சொல்லி சிகிச்சைக்கு ஆஜராகி உள்ளார். அவரை மேல் சிகிச்சைக்கு முன்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை விழுப்புரம் அனுப்பி வைத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் மருத்துவமனையின் வெளிநோயாளி சீட்டின் புகைப்படநகலில் அவரை தாக்கிய நபர் பற்றிய விவரங்கள் எதுவும் இல்லை.

**நீதிமன்ற கேள்வி :** மேற்படி சார்லஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட புறநோயாளி சீட்டு கொண்டு வந்துள்ளீரா?

**பதில் :** கொண்டுவரவில்லை. 12 வருடத்திற்கு முன்பான கோப்புகள் என்பதால் அலுவலகத்தில் இல்லை. 3 ஆண்டுகள் மட்டுமே ஆரம்ப சுகாதார நிலையத்தில் அந்த ஆவணங்கள் பராமரிக்கப்படும்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

அடிப்பபட்ட நபருக்கு எந்த மருத்துவர் சிகிச்சை அளித்தார் என்று எனக்கு தெரியாது. எந்த தேதியில் அவர் சுகாதார நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார்

என்ற குறிப்புகள் எதுவும் இல்லை. காயம் அடைந்த நபர் தாக்கப்பட்டதாகதான் புறநோயாளி சீட்டின் புகைப்படநகலில் சொல்லப்பட்டுள்ளது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C . Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.